தோமா அப்போஸ்தலனின் தண்டனை நிறைவேற்றம்

(*Consummation of Thomas, the Apostle*)

ஆங்கிலத்தில் : அலெக்சாண்டர் வாக்கர். (*Anti-Nicene Fathers*, Volume 8 என்ற நூலிலிருந்து).

தொகுப்பு : அலெக்சாண்டர். ராபர்ட்ஸ் . ஜேம்ஸ் டொனால்டுசன், ஏ. க்ளீவ்லண்ட் காக்ஸ் . ஆகியோர்.

தமிழில் : ஸ்ரீவில்லிபுத்தூர் எஸ் . ரமேஷ்

மிஸ்தியு ராஜாவின் கட்டளைப்படி, அப்போஸ்தலன் தோமா சிறையில் தள்ளப்பட்டான். அவன் சொன்னான் : நான் ஸ்வாமியை மகிமைப்படுத்தி, அவரது வார்த்தைகளை, சிறைக்கைதிகளுக்கு பிரசங்கிப்பேன். அதனால், சகலரும், அவரது சமூகத்தில் களி கூறுவார்கள். எனவே, ராஜாவின் புத்திரனான, யுசனே என்பானும், அவனது தாயான டெர்ஷியா என்பவளும், மிக்தோனியா, மற்றும் மார்கியா ஆகியோரும் விசுவாசிகளாக மாறினார்கள். ஆனாலும், அவர்கள், ஞானஸ்நானம் பெறுவதற்கு தகுதியானவர்களாக கருதப்படவில்லை. ஆசீர்வதிக்கப்பட்டவர், சிறையில் தள்ளப்பட்டது குறித்து, அவர்கள், மெத்த விசனம் அடைந்தார்கள். அவர்கள், சிறைச்சாலைக்கு வந்து, சிறை அதிகாரிகளுக்கு அதிக பணம் கொடுத்து, சிறைக்குள் அவனிடம் சென்றார்கள். அவன், அவர்களைக்கண்ட மாத்திரத்தில் , மகிழ்ந்து , தேவனை மகிமைப்படுத்தி, அவர்களை ஆசீர்வதித்தான். அவர்கள், தேவனின் முத்திரையைப்பெறுவதற்கு வேண்டிக்கொண்ட போது, ஒரு சவுந்தரியமான வாலிபன் அவர்களுக்கு சொப்பனத்தில் தோன்றி, அப்போஸ்தலனை யுசனேவின் வீட்டுக்குப்போகுமாறு பணித்தான்.

மீண்டும், அந்த சவுந்தரியமான வாலிபன், அவர்களிடத்து வந்த போது, தோமா, வர இருக்கும் ராத்திரியில், இதைச்செய்யும்படி பணித்தான். அவன், அவர்களுக்கு முன்பாக ஓடி, போகும் வழியெங்கும் வெளிச்சத்தைப்பரப்பியபடி சென்று, காவலுடன் பாதுகாக்கப்பட்டிருந்த கதவுகளை சத்தமின்றி திறந்து, அது வரை புரியாதிருந்த காரியங்களை செய்து முடித்தான். திவ்விய நற்கருணை விருந்தில், அவர்கள் சம்பாஷிக்கும்படிக்கு அவன் ஏற்பாடு செய்து, அவர்களோடு சம்பாஷித்த பின்பு, அவர்களின் விசுவாசத்தை திடப்படுத்தி, அவர்களுக்காய் தேவனிடத்தில் பரிந்து பேசி, ஸ்திரீகளை விட்டு விட்டு, அவன் முன்னே சென்று, மிஸ்தியு ராஜா அவரைக்கொன்று விடுவாரே என்று அவர்கள், விசனப்பட்டு அழுதார்கள். மேலும், தோமா அங்கு போன போது, சிறை அதிகாரிகள் சண்டையிட்டுக்கொண்டு , நாம் அந்த மந்திரவாதிக்கு என்ன தீங்கு விளைவித்தோம். இப்படி, தனக்கென மந்திரவாதத்தைக்கைக்கொண்டு சிறைச்சாலையின் கதவுகளைத்திறந்து, எல்லா சிறைவாசிகளையும் ஸ்வதந்திரமாக விடுவித்து விட்டாரே? ஆனாலும், நாம் போய், ராஜாவின் மனைவியும், அவரது பிள்ளையும் என்னவானார்கள் என்று ராஜாவிடத்து அறியப்பண்ணுவோம் என்று பேசிக்கொண்டிருக்கிறதைக்கேட்டார். அவர் அங்கு வந்த போது, அவரது வஸ்திரங்களை உரிந்து , அவரது இடுப்பில் மாத்திரம் ஒரு கச்சையை கட்டி, அவ்வண்ணமாய், ராஜாவின் முன்பாய் நின்றார்கள்.

மிஸ்தியு அவர்களிடத்து : நீ அடிமையா ? சுதந்திரவாளியா? என்று கேட்டான். அதற்கு தோமா பிரதியுத்தரமாக : நான் அடிமையல்ல. உனக்கு என் மேல் உனக்கு அதிகாரம் இல்லவே இல்லை. அதற்கு மிஸ்தியு, அது எப்படியாகும்? நீ எங்கிருந்தோ இந்த தேசத்திற்கு ஓடி வந்தாயா? என்றான். அதற்கு தோமா : அநேகரை ரட்சிக்கும்படிக்கும், உன் கைகளால், இந்த சரீரத்தை விட்டு அகலும் படிக்கும், நான் இங்கு வந்தேன். மிஸ்தியு அவனிடம் : உன் எஜமானன் யார்? அவனது நாமம் என்ன? அவன் தேசமென்ன? அவன் யாருடையவன் என்றான். தோமா சொன்னான் : வானத்துக்கும், பூமிக்கும் தேவனான எனது ஸ்வாமி , எனக்கும், உனக்கும் எஜமானானவன். பின்னும் மிஸ்தியு சொன்னான் : அவர் என்னவாக அழைக்கப்படுகிறார்? அதற்கு தோமா சொன்னான் : அவரது . மெய்த்திருநாமத்தை நீ இந்த சமயத்தில் அறிய மாட்டாய். ஆனால், இந்த காலத்திற்காக அவருக்குத்தரப்பட்ட திருநாமம் என்னவென்று உனக்குச்சொல்லுகிறேன் . -- இயேசு கிறிஸ்து. அதற்கு மிஸ்தியு சொன்னான் : நான் உன்னைக்கொன்று போடும்படிக்கு அவசரப்படவில்லை . ஆனால், என்னையே கட்டுப்படுத்திக்கொண்டேன் . ஆனால், உன்னைப்பற்றி தேசம் முழுமைக்கும் அறியப்படும்படிக்கு, நீ உன்னுடைய மந்திரவாதத்தை காட்சியாய் காட்டி விட்டாய் . உன்னோடு உன் மந்திரவாதம் அழியும்படிக்கும், எங்கள் தேசம் அவைகளிலிருந்து பரிசுத்தமாகும்படிக்கும் , நான் இதைச்செய்யப்போகிறேன். பின்னும் தோமா சொன்னான் : என்னைப்பின்தொடரும் இவைகளை மந்திரவாதம் என்றா சொல்லுகிறாய்? அவைகள், இங்கு உள்ள ஜனங்களை விட்டு ஒரு போதும் நீங்காது.

இந்த விஷயங்களை சொல்லிக்கொண்டிருக்கும் போதே, அவனை எந்த விதத்தில் கொல்லலாம் என்று மிஸ்தியு எண்ணிக்கொண்டிருந்தான். ஏனெனில், சுற்றியிருந்த பெருங்கூட்டத்தைக்கண்டும், அதிலும், முதன்மையானவர்களும் அவனை நம்பியது கண்டு, அவன் அச்சம் கொண்டான். பின்பும் , அவன் எழுந்து, தோமாவை பட்டணத்துக்கு வெளியே கொண்டு போனான். அவர்களுடன், சில ஆயுதங்கள் தாங்கிய சைனிய வீரர்களும் சென்றார்கள். மீதியான ஜனங்களோ, ராஜா, அவனிடத்து ஏதோ தெரிந்து கொள்ள விரும்புகிறான் என்று எண்ணினார்கள். அவர்கள் நின்று கூர்ந்து நோக்கினார்கள். அவர்கள் மூன்று ஸ்டேடியா தூரம் சென்ற பிறகு, அவன், நான்கு சைனிய வீரர்களிடமும், ராஜ்ய பிரதானிகளில் ஒருவரிடமும் அவனை விட்டு விட்டு, அவனை மலை மேல் கொண்டு சென்று, ஈட்டியால் குத்திக்கொல்லும்படிக்கு உத்திரவிட்டு விட்டான். ஆனால், அவன் மாத்திரம் பட்டணத்துக்கு திரும்பி விட்டான்.

அங்கிருந்தோர், தோமாவைக்காப்பாற்றும்படிக்கு மிகையான ஆவலாய் சென்றனர். ஆனால், அவனோடு இருந்த சைனிய வீரர்கள் அவனைக்கொண்டு சென்று விட்டனர். அவன் மந்திரவாதம் செய்பவன் என்பதால், அவனது இருபுறமும் இரண்டிரண்டு பேர் அவனைப்பிடித்துக்கொண்டிருந்தார்கள். அவனை ராஜப்பிரதானி கையைப்பிடித்து, மரியாதையாக கொண்டு சென்றார். அதே நேரத்தில், ஆசீர்வதிக்கப்பட்ட அப்போஸ்தலன் சொன்னது: ஓ தேவனே! உம்முடைய கிருபை, உம்முடைய மறைந்துள்ள மர்மங்கள், ஜீவியம் முடிவுறும் காலத்திலும் நிரம்பியிருக்கிறது. அதை சரீரம் உணருமாப்போலே உணராதபடிக்கு இருக்காது. ஏனெனில், இதோ பாருங்கள், நால்வர் என்னைப்பிடித்துள்ளனர். ஒருவர், என்னைக்கொண்டு செல்லுகிறார். ஏனெனில், நான் ஒருவருக்கு மாத்திரமே உரித்தானவன். அவருக்கு மாத்திரம், எப்போதும் கண்ணால் காணாதபடிக்கு நான் செல்லுகிறேன். நான் எவரை நோக்கிச்செல்லுகிறேனோ, எவர் என்னுடனே காணாதபடிக்கு எப்போதும் இருக்கிறாரோ, அவரும் அந்நியர் என இப்போது தெரிந்து கொண்டேன். அவர் ஒருவனால் குத்தப்பட்டார். நான் நால்வரால் குத்தப்படப்போகிறேன். அவர்கள், ஈட்டியால் அவனை குத்துவதற்கான இடத்திற்கு வந்த
போது, .தன்னை ஈட்டியால் குத்த வந்தவர்களிடம் தோமா உரைத்ததாவது: இப்பொழுதாவது நான் சொல்வதைக்கேளுங்கள். நான் இந்த உடலை விட்டுப்போகும் போது, உங்கள் கண்கள் அறியாமையால் இருண்டிருக்க வேண்டாம். நீங்கள் விசுவாசித்த தேவனைப்பற்றி நான் உங்களுக்கு பிரசங்கித்தவைகளைக்கேளாதபடிக்கு உங்கள் காதுகள் அடைபட்டிருக்க வேண்டாம். உங்கள் ஆத்துமாக்கள் துடுக்குத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பின்பு, விடுதலை அடைந்தவர்களைப்போல நீங்கள் நடத்தை உள்ளவர்களாய் இருந்து, மனுஷ மகிமை இல்லாது, தேவனை நோக்கி வாழ்வில் ஜீவிக்கிறீர்கள். அவர், பின்னும், யுசானேவிடம் சொன்னதாவது: பூச்சக்கரத்தின் ராஜாவானவரின் புத்திரனே! ஆனாலும், இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனே! நான் அவர்களை விட்டு அப்பாலே போய், ஜெபம் பண்ணும்படிக்கு, மிஸ்தியுவின் கட்டளையை நிறைவேற்ற வந்தவர்களுக்கு என்ன நிலுவைத்தொகைகளை தர வேண்டுமோ அதை தந்து விடு. பின்னும், யுசானே, அந்த சைனிய வீரர்களுக்கு பணத்தை கொடுத்தான். அப்போஸ்தலர் அவனையும் ஜெபத்திற்கு கொண்டு சென்றார். அது பின்வருமாறு அமைந்தது. என் ஸ்வாமி, என் எம்பெருமானே! என் நம்பிக்கையும், என் தலைவனுமானவனே! சர்வ தேசங்களுக்கும் வழிகாட்டியானவரே, உம்மை சேவிக்கும் எல்லாருடனும் உம்மை அடியேன் பின்தொடருகிறேன். இந்நாளில், உம்மை நோக்கி அடியேனை நீர் வழி நடத்தும். நீ எனக்குத்தந்த ஆத்துமாவை வேறு யாரும் எடுத்துக்கொள்ள வேண்டாம். ஆயக்காரர்களும், பிச்சைக்காரர்களும் என்னை நோக்க வேண்டாம்.

சர்ப்பங்கள் என்னை அவதூறு செய்ய வேண்டாம். திராகனின் பிள்ளைகள் என்னிடம் சீற வேண்டாம். இதோ பாரும். நான் உம்முடைய காரியத்தை நிறைவேற்றி விட்டேன். நீர் அடியேனிடம் தந்ததை நிறைவேற்றி விட்டேன். உம்மிடம் இருந்து விடுதலை பெறும்படிக்கு நான் அடிமையானேன். தேவரீர் அதை என்னிடம் தந்து என்னை உத்தமமாக்கினீர். கேட்க வேண்டியவர்கள் கேட்கும்படிக்கு, இதை மனத்தடுமாற்றமின்றி சொல்லுகிறேன். சகலரிடமும், உம்மை மகிமைப்படுத்துகிறேன். ஸ்வாமி. என் எஜமானனே, மகிமை என்றென்றும் உமக்கே உரித்தாகுக. ஆமென்!

பின்னும், அவன் ஜெபம் பண்ணின பிறகு, அங்கிருந்த சைனிய வீரர்களிடம்: வாருங்கள். உங்களை அனுப்பினவரின் பணியை நிறைவேற்றுங்கள் என்றான். அந்த நால்வரும் ஒரே நேரத்தில் அவரை குத்திக்கொன்றார்கள். பின்னும், எல்லா ஐக்கிய சகோதரரும் அழுது, அவனை அழகிய சால்வைகளிலும், நார்த்துணிகளிலும் சுற்றினார்கள். அவனை, வயோதிகமான ராஜாக்களை புதைக்கும் கல்லறைக்குள் கிடத்தினார்கள்.

சைபோருவும், யுசானேவும், பட்டணத்துக்குள் நுழையாமல், அங்கேயே முழு நாட்பொழுதும் தங்கியிருந்து, இரவின் வருகைக்காக காத்திருந்தனர். அவர்களிடத்து, தோமா தோன்றி சொன்னதாவது: நான் அங்கே இல்லை. நீங்கள் ஏன் அமர்ந்து காவல் காத்துக்கொண்டிருக்கிறீர்கள்? நான் மேலே சென்று, நான் நம்பியவற்றைப்பெற்றுக்கொண்டேன். ஆதலால், நீங்கள் எழுந்து நடந்து செல்லுங்கள். பிறகு, சிறிது நேரத்துக்குப்பிறகு என் அருகில் நீங்கள் கொண்டு வரப்படுவீர்கள். மிஸ்தியுவும், கரிசியஸும், தெர்ஷியாவையும், மிக்தோனியாவையும் ரொம்ப விசனப்படுத்தினார்கள். என்றாலும் அவர்களின் கருத்துக்களை மாற்றிக்கொள்ளும்படி வற்புறுத்த வில்லை. பின்னும் தோமா தோன்றி அவர்களிடத்து சொன்னதாவது: முந்தைய விஷயங்களை மறவாதிருங்கள். பரிசுத்தமானவரும், பரிசுத்தப்படுத்துகிறவருமான இயேசு கிறிஸ்து தாமே உமக்கு ஒத்தாசை செய்வார். மிஸ்தியுவும், கரிசியஸும், அவர்களின் கருத்துக்களை மாற்றிக்கொள்ளும்படி வற்புறுத்த முடியவில்லை என்பதோடு, அவர்கள் இஷ்டப்படியே இருக்க விட்டு விட்டார்கள். பின்னும் சகல ஐக்கிய சகோதரரும் ஒருமித்தனர். ஆசீர்வதிக்கப்பட்டவரை , கொலை பண்ணும்படிக்கு கொண்டு சென்ற போது, மலையில், சைபோருவை திருச்சபையின் மூப்பராகவும், யுசானேவை உதவிக்காரராகவும் நியமனம் பண்ணினார். பின்னும் தேவன் அவர்களுக்கு ஒத்தாசை பண்ணி, அவர்கள் மூலமாய் விசுவாசத்தை பெருகப்பண்ணினார்.

நீண்ட காலத்திற்குப்பின்பு, மிஸ்தியுவின் புத்திரரில் ஒருவனை பிசாசு பிடித்துக்கொண்டது. அந்தப்பிசாசு உறுதியாய் இருந்தபடியால், ஒருவனாலும் அவனை சொஸ்தப்படுத்த முடியாமல் போனது. மிஸ்தியு இதைக்கருதி சொன்னதாவது: நான் போய், கல்லறையைத்திறந்து, அப்போஸ்தலரின் சரீரத்தின் எலும்பு ஒன்றை எடுத்து, அதனால் என் பிள்ளையைத்தொடுவேன். அவன் சொஸ்தமாவான். அவன் எண்ணியிருந்தபடியே செய்யும்படிக்கு அவன் போனான். பின்னும், ஆசீர்வதிக்கப்பட்ட அப்போஸ்தலன் அவர் முன்னே தோன்றி சொன்னதாவது: நான் ஜீவித்திருந்த போது,நீ என்னை நம்பவில்லை. நான் மரித்த பின்பு, நீ என்னை எப்படி நம்புவாய்? பயப்படாதே! இயேசு கிறிஸ்து தனது காருண்யம் மூலமாய் உன்னிடம் அன்பாய் வந்தடைவார். மிஸ்தியு அங்கு பார்த்த போது எலும்புகளைக்காணவில்லை (ஏனெனில், சகோதரரில் ஒருவர், அவற்றை எடுத்துக்கொண்டு மேற்குத்திசை பிராந்தியங்களுக்குச்சென்று விட்டார்). அவன் அங்கு எலும்புகள் இருந்த இடத்தில் இருந்த மண்ணை மட்டும் எடுத்துக்கொண்டு அதை வைத்து தனது பிள்ளையைத்தொட்டபடி சொன்னான். இயேசுவே, ஓ மனுஷரிடத்தில் அன்பான ஸ்வாமி, நான் உம்மை விசுவாசிக்கிறேன்.

அறிதலை உண்டாக்கும் உம்முடைய வெளிச்சத்தை அவர்கள் காணாதிருக்கும்படிக்கு, எப்போதும் மனுஷரை வாதிக்கும் சுபாவமானவன், என்னை விட்டு அகன்றான், என்றான். அவரது பிள்ளை இந்த விதமாய் சொஸ்தமடைந்த பின், சைபோருவின் ஆளுமையில் இருக்கும் ஐக்கிய சகோதரரைச்சந்தித்து, அவன், எப்போதும், எப்போதும், மகிமை உரித்தான நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் காருண்யத்தைப்பெற, தனக்காக ஜெபிக்கும்படிக்கு ஐக்கிய சகோதரரை வேண்டிக்கொண்டான். ஆமென்!

- -- - - - - -- - - - ---- -

http://www.gnosis.org/library/constom.htm

ஸ்டேடியா (stadia) : பண்டைய ரோமானிய, கிரேக்க நாடுகளில், புழக்கத்தில் இருந்த நீட்டல் அளவை. ஒரு "ஸ்டேடியம்" என்பது

185 மீட்டர் நீளம் உடையது. ஒரு விளையாட்டரங்கின் நீளமும் அதுவே. ஸ்டேடியா என்பது ஸ்டேடியம்
(stadium) என்பதன் பன்மைச்சொல்.